# நாவைப் பேண சில வழிகள் -2

حفظ اللسان

Moulaviya M.Y. Maziyya B.A. (Hons)

5) மரணத்தை நினைவூட்டிக் கொள்ளல்; ஆசையைக் கட்டுப்படுத்திக்கொள்ளல் . அல்லாஹ் கூறுகின்றான்.

كُلُّ نَفْسٍ ذَآئِقَةُ الْمَوْتِ وَإِنَّمَا تُوَفَّوْنَ أُجُورَكُمْ يَوْمَ الْقِيَامَةِ فَمَن زُحْزِحَ عَنِ النَّارِ وَأُدْخِلَ الْجَنَّةَ فَقَدْ فَازَ وَمَا الْحَيَاةُ الدُّنْيَا إِلاَّ مَتَاعُ الْغُرُورِ

ஒவ்வொரு ஆன்மாவும் மரணத்தைச் சுவைக்கக்கூடியதே! நீங்கள் உங்களுக்கான கூலிகளை மறுமை நாளில் தான் முழுமையாக வழங்கப்படுவீர்கள். எவர் நரகத்திலிருந்து தூரமாக்கப்பட்டு சுவர்க்கத்தில் நுழைவிக்கப்படுகின்றாரோ அவரே வெற்றி பெற்றவர் ஆவார். இவ்வுலக வாழ்வு ஏமாற்றம் தரும் இன்பமேயன்றி வேறில்லை.

(ஆல இம்ரான் : 03:185)

حَتَّىٰ إِذَا جَاءَ أَحَدَهُمُ الْمَوْتُ قَالَ رَبِّ ارْجِعُونِ ﴿٩٩﴾ لَعَلِّي أَعْمَلُ صَالِحًا فِيمَا تَرَكْتُ ۚ كَلَّا ۚ إِنَّهَا كَلِمَةٌ هُوَ قَائِلُهَا ۖ وَمِن وَرَائِهِم بَرْزَخٌ إِلَىٰ يَوْمِ يُبْعَثُونَ ﴿١٠٠﴾

முடிவாக, அவர்களில் ஒருவனுக்கு மரணம் வந்து விட்டால், அவன், 'எனது இரட்சகனே! என்னை நீ (உலகிற்கு) திருப்பி அனுப்புவாயாக!' எனக் கூறுவான்.
நான் விட்டு வந்ததில் நல்லறம் புரிவதற்காக (திருப்பிஅனுப்புவாயாக!) எனக் கூறுவான். அவ்வாறன்று, நிச்சயமாக அது அவன் கூறும் வெறும் வார்த்தையாகும். அவர்கள் எழுப்பப்படும் நாள் வரை அவர்களுக்கு முன்னால் ஒரு திரை இருக்கிறது.

(அல் முஃமினூன்:23: 99,100)

அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்கள் கூறியதாவது:
அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என் தோளைப் பிடித்துக் கொண்டு, "உலகத்தில் நீ ஒரு அன்னியனைப் போன்று, அல்லது ஒரு வழிப்போக்கனைப் போன்று இரு" என்று சொன்னார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரழி) அவர்கள் கூறிதாவது:
நீ மாலை நேரத்தை அடைந்துவிட்டால் காலை வேளையை எதிர்பார்க்காதே! நீ கலை வேளையை அடைந்து விட்டால் மாலை நேரத்தை எதிர்பார்க்காதே! நீ நோய்வாய்ப்படும் நாளுக்காக உனது ஆரோக்கியத்தில் சிறி(து நேரத்)தைச் செலவிடு. உனது இறப்பு(க்குப் பிந்திய நாளு)க்காக உனது வாழ் நாளில் சிறி(து நேரத்)தைச் செலவிடு.

**நூல்:புகாரி: 6416**

மரணத்தை நினைவூட்டல், பேராசைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளல் போன்றவற்றைப் பேசுகின்ற வசனங்களையும், நபிமொழிகளையும் சிந்திக்கின்ற ஒருவர், தனது நாவு பாவச்செயல்கள் புரிவதை அனுமதிக்க மாட்டர். ஏனெனில் கெடுதிகள் புரிந்துகொண்டிருக்கின்ற போதே தனக்கு மரணம் சம்பவித்துவிடும் என அவர் பயப்படுவார். ஏனெனில் அவர், "ஒவ்வோர் அடியானும் தான் இறக்கும்போதிருந்த நிலையிலேயே எழுப்பப்படுவார்." என்று நபிமொழியை கண்முன்னே வைத்துக் கொண்டு செயற்படுவார்.

(நூல் : முஸ்லிம்: 5518)

6) **கெட்ட செயல்களிலிருந்து நாவைப் பேணுமாறு ஆர்வமூட்டுகின்ற, மற்றும் கட்டளையிடுகின்ற வசனங்களையும், ஹதீஸ்கலையும் அதிகமாகப் படித்தல்,**

7) **தொழுகையைப் பேணல்:**

அல்லாஹ் கூறுகின்றான்:

اتْلُ مَا أُوحِيَ إِلَيْكَ مِنَ الْكِتَابِ وَأَقِمِ الصَّلَاةَ إِنَّ الصَّلَاةَ تَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ وَلَذِكْرُ اللَّهِ أَكْبَرُ وَاللَّهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ

**நிச்சயமாகத் தொழுகை மானக்கேடானதையும், வெறுக்கப்பட்டதையும் விட்டும் தடுக்கும்.**

**(அல் அன்கபூத்: 29: 45)**

நபி (ஸல்) அவர்களிடம், "ஒரு மனிதர் முழு இரவிலும் தொழுகின்றார், ஆனால், காலையில் திருடுகின்றார்," என்று சொல்லப்பட்டது. அதற்கவர்கள், "நீங்கள் சொல்லுகின்ற அந்த விடயம் அவரை அதிலிருந்து விலக்கிவிடும்" என்று கூறினார்கள். அல்லது, "தொழுகை அவரை அதிலிருந்து தடுத்துவிடும்!" என்று கூறினார்கள்.

அல்பானீ: ஸில்ஸிலா அல் அல்ழாஈபா: (2)

மேலும் அவர்கள் கூறினார்கள்:

**இரவுத் தொழுகையை நீங்கள் பேணித் தொழுது வாருங்கள். ஏனெனில், அது உங்களுக்கு முன்னிருந்தவர்களின் வழிமுறை, உங்களுக்கும் உங்கள் இரட்சகனுக்குமிடையில் நெருக்கத்தை ஏற்படுத்தக் கூடியது, பாவங்களுக்குப் பரிகாரம், தீய செயல்களிலிருந்து மனிதனைப் பாதுகாக்கக் கூடியது.**

**நூல்: ஹகிம்**

**அல்பானீ: ஸஹீஹுத் தார்கீப்: 618)**

**இர்வாஉல் க.்.லீல் : (452)**

இரவுத் தொழுகை பாவச் செயல்கள், தீமைகள் போன்றவற்றில் இருந்து மனிதனைப் பாதுகாக்கின்றது. அது உளத்தூய்மையுடன் அமைந்து விட்டால்! இறையச்சத்துடன் அமைகின்ற தொழுகை மனித உள்ளத்திற்கும் இறைவனுக்குமிடையிலான உறவை

வலுப்படுத்துகின்றது. இதனால், உள்ளம் சீரடைந்துவிட்டால் ஏனைய உறுப்புக்கள் சீராகி விடுகின்றன. எனவே, நாவும் சீரடைந்து விடுகிறது. பிறகு நல்லவற்றையே அன்றிப் பேசாமாட்டாது.